# பக்த ஹனுமான்




Price 0—1—3 விலை 0—1—3

# பக்த ஹநுமான்

[கதைச் சுருக்கம்]

ஆரண்யத்தில் வசித்து வரும் அஞ்சனா தேவி, புத்திர பாக்கியத்திற்காகப் பகவானைப் பிரார்த்திக்க, வாயுவின் மூலமாக ஒரு சத்புத்திரனை அடைகிறாள். அக் குழந்தை தனது மூன்றாவது வயதில் பசிக்குப் புசிக்க உதய சூரியனை பழமெனக் கருதி அதனிடம் பாய்கிறது. ஆனால் இந்திரன் தன் வஜ்ராயுதத்தால் குழந்தையைத் தாக்க வாயு அறிந்து, கோபங்கொண்டு மூவுலகத்தாரும் மூச்சுவிடத் திணறும்படி காற்றைப் பந்தனம் செய்துகொள்கிறான். பிரம்மா முதலிய தேவர்கள் வந்து வாயுவை சமாதானஞ் செய்து, குழந்தைக்கு ஹநுமான் என்று பெயரிட்டு அநேக வரமளித்து, பிற்காலத்தில் ஸ்ரீ ராமனின் தரிசனமும் அதனால் கீர்த்தியும் அடைவான் என்று ஆசீர்வதித்துச் செல்கிறார்கள்.

சுக்ரீவனும் ஹநுமானும் வாலிக்குப் பயந்து ஒளிந்து திரியும் சமயம் சீதையைத் தேடிவரும் ராமலக்ஷ்மணனைச் சந்தித்து, ஸ்ரீ ராகவனின் வேண்டுகோளின்படி ஹநுமான் சீதையைத் தேடி இலங்கையை நோக்கிச் செல்கிறார். அங்கு அசோக வனத்தில் சீதையைச் சந்தித்து, ராவணனுடைய தர்பாரில் சீதா பிராட்டியை திருப்பியனுப்பும்படி ஹநுமான் வேண்ட, அவர் வாலில் தீ வைக்கிறான் ராவணன். ஹநுமான் அத்தீயின் உதவியால் இலங்கையைச் சுட்டெரித்து ஸ்ரீ ராமரிடம் திரும்புகிறார்.

ராம-ராவண யுத்தம் நடந்து, சீதை, லக்ஷ்மணன், ஹநுமானோடு ராமர் அயோத்தியை அடைய பட்டம் சூட்டப்படுகிறார். ஹநுமானும் அவர்களிடம் விடைபெற்று ஆரண்யம் வந்து மாத்ரு சேவை புரிந்து வருகிறார்.

கலகப் பிரியரான நாரதர் ஹநுமானின் ராமபக்தி மகிமையை உலகத்தாருக்கு அறிவிக்கும்பொருட்டு, யாகசாலையில் விஸ்வாமித்ரருக்கு, அங்கு வேட்டையாடிவந்த சகுந்தராஜன்மீது கோபத்தை மூட்டுகிறார். அதனால் ஸ்ரீ ராகவனிடம் விஸ்வாமித்ரர் சென்று, மறுநாள் சூரிய உதயத்திற்குள் சகுந்தன் தலை தன் காலடியில் விழ உறுதி மொழி வாங்குகிறார். ஆனால் நாரதர், சகுந்தன் மனைவியை அஞ்சனாதேவியிடம் அனுப்பி மாங்கல்யதானம் கேட்டு வாங்கும்படி செய்கிறார்.

ஹநுமான் மாத்ரு வாக்கைப் பரிபாலனஞ் செய்ய ஸ்ரீ ராகவனோடு எதிர்க்கிறார். இச்சங்கடமான நிலைமையை நாரதர் சமாளித்து ஹநுமானின் பக்தியை வெளிப்படுத்தும் திறமையை வெள்ளித் திரையில் கண்டு மகிழுங்கள்!

சுபம்!

# பக்த ஹனுமான்

## பாடல்கள்

1. அஞ்சனாதேவி [நாட்டை குறிஞ்சி—ஆதி

பல்லவி

மங்கள தாயகனே வரமருள்
சராசர நாயகனே (மங்)

அனுபல்லவி

பங்கஜ மலரடி நான் மறவேன், உன்
பன் நெடு நாள் குறை தீர இரங்கியே (மங்)

சரணம்

ஞானமும் இமையோர் பணியும் உன் திருவடி
தியானமும் குறையா உயர் புகழும் சேர்
மானவர் வானவர் யாரினும் மேலாம்
மைந்தன் ஒருவனை தந்தருள் ஈசா (மங்)

2. ராமர் பல்லவி [மாஞ்சி—சாப்பு

பாவை எந்தன் ஆருயிர் ஸீதை
தேவீ எங்கு சென்றாளோ, என்செய்வேன்—மெல்லடி (பாவை)

அனுபல்லவி

ஊர்எல்லை தாண்டுமுன் கானம் எவ்வளவு தூரம்
என்றெனை கேட்டாளே மெல்லிய (பாவை)

சரணம்

வானெங்கும் வளர்தெய்வ மரங்காள் பறவைகாள்
வனதேவதையே நீங்கள் சொல்லுங்கள்—மெல்லடி (பாவை)

3. ஹனுமான் பல்லவி [தேவகாந்தாரி—ஆதி

மஹா பாக்யசாலி நானின்றே

அனுபல்லவி

மஹா புருஷனின் தெரிசனம் காண
மா முனிவரும் தவம்புரிய நானே (மஹா)

சரணம்

திசை அதிபன் திருவாயுவின் மைந்தன்
திருவடி பணிந்திடும் என்பெயர் ஹனுமான்
தசரத பால ஸஜ்ஜன பால, நீ
தானே வலிய வந்ததாலே வாழ்வில் (மஹா)

4. ஸீதை [மாயமாளவகௌள்—ஆதி

பல்லவி

வருவார் வருவார் என்று பார்த்தேன்
வீணே மாளாமல் என்னுயிரை காத்தேன்—நாதன் (வரு)

அனுபல்லவி

பரிவாய் மிதிலை நாடி வந்தார்—சபைநடுவே
பந்தயம் வென்று மாலையிட்டார்—கைவிடமாட்டார் (வரு)

சரணம்

வனமெங்கும் என்னைத்தேடி அலுத்தாரோ—அன்றி
மனம் என்ன நினைத்தாரோ
தினமும் தாய்என தொழும் தம்பி பதறச்சொன்ன
தீயிற்கொடிய என்சொல் நினைந்து சினந்தாரோ (வரு)

5. சங்கு—முந்திரிக்கோட்டை [கோரஸ்—ஓயில்டான்ஸ்

தெம்மாங்கு

முந்திரி :—கொண்டாட்டம் போடுவோம் செண்டுபோல் ஆடுவோம்
ஒன்றுகூடி இன்பமாக வண்டுபோல் பாடும் (கொண்)
சங்கு :—நாடு செழிப்பாச்சு நம் கவலை தீர்ந்தாச்சு
ராமர் பட்டம் சூட்டிக்கொண்டு நம்மையாள வந்தாச்சு (கொண்)
முந்திரி :—சட்டிபோல கொண்டையுள்ள சொகுஸா ரோஜாவே
இனி பட்டியெல்லாம் பால் மணக்கும் ஒயிலு சுந்தரியே
சங்கு :—அள்ளி நிற்கும் சுங்குகார அழகு ராஜாவே நம்ம,
அரசரைபோல் யாருமில்லே மகிழ மன்னவரே
முந்திரி :—நல்ல கீர்த்தி நம்ம நாட்டுக்குத்தான் சொகுஸா ரோஜாவே
உங் கெண்டை விழி எம்மேலேதான் ஒயிலு சுந்தரியே
சங்கு :—வருத்தமில்லே இனிமேலே தான் அழகு ராஜாவே
உங் கருத்தவிழி எம்மேலேதான் மகிழ மன்னவரே
எல்லோரும் :—ராமா ஜெய ராமா மனுநீதியுள்ள எங்க ராமா
ஜெகமே புகழும் ஸ்ரீராமா ஸீதா ராமா ராம ஜே ஜே

6. டான்ஸ் [ஹிந்துஸ்தானி பீலு—ரூபகம்

ஆனந்த வைபோகந்தானே
மிக அன்போடு கொண்டாடுவோமே (ஆனை)
ராம ராஜ்யம் வந்ததிப்போது நமக்கினி கவலையு மேது
இன்பமாகுமே புண்ய பூமியில் எந்த நாளுமே
மனித வாழ்வினில் புனித முண்டாக
வாழ்த்துங்கள் ராமரை ஜே ஜே
ஸீதா ராமரின் ஜெயமே தினமே சொல்லு நிற்பயமே
பாதார விந்தமே பஜித்தால் ஆதாரம் வேறு வேண்டாமே

7. ஹனுமான் [ஷண்முகப்பிரிய—ரூபகம்

பல்லவி

விடை தந்தருள்வீர் ரகுவீரனே
பட்டாபி ராமனே (விடை)

அனுபல்லவி

அடிமலர்க் கணம் மறவா, மெய்
அறிவும் நிஜபக்தியும் தந்து (விடை)

சரணம்

ஜெய கல்யாண ராமா என்று உனது நாமம் பஜிக்கவும்
வயது முதிர்ந்த எந்தன் அன்னை திருவடி பணிவிடை புரியவும் (வி)

8. நாரதர் பல்லவி [தன்யாசி—ஆதி

கலகம் ஒன்றும் ஒரு நாள் இல்லையானால்
தலை வெடிக்கும் இது என்விதி தானே (கல)

அனுபல்லவி

உலகம் எங்கும் இதனால் பொல்லாப்பு
ஒன்றும் இல்லாமலே இன்றெண் தவிப்பு
ராமனை புருஷோத்தமனை ரவிகுல ஸோமனை பாடுவேனே

சரணம்

ரா பகல் ஓயா சஞ்சலம் தீரவே
பூமனை ஸ்ரீ பரந்தாமனையே ஆத்மா (ரா)

9. விஸ்வாமித்ரர் பல்லவி [முகாரி—ஆதி

பாவன தேவதையே அக்னிதேவனே நீ கதியே பரம (பாவன)

அனுபல்லவி

தேவர்கள் வாழ்வது உன்னாலே ஸர்வ
ஜீவனும் வாழ்வதும் உன்னாலே (பாவன)

சரணம்

கனலே ஜெய ஜெய நீ இல்லையானால் கடவுள் பூஜைஏது
அனலே நீ இல்லையானால் அந்தணர் ஆகுதி ஏதுயர் ஸமரஸ தெய்வமே
ஜெய ஜெய அனலே ஜெய ஜெய பகவான்
ஜெய செங்கனலே ஜே ஜே ஜே

10. ஹனுமான் பல்லவி [கர்மஸ்—ரூபகம்

என்னுடைய ராகவனே உன்னுடனே போர்தொடுப்பேன்
இவ்விதிக்கு என்ன செய்வேன் இதுவுமுன் நாடகமோ (என்)

அனுபல்லவி

மாதாவிற் கபராதி யாவதோ எவ்வினையோ
உன், பாதங்கள் கபராதி ஆவதோ சோதனையோ (என்)

சரணம் [குந்தலவராளி

ராமா ஓராகவனே ரவிகுல சேகரனே
ராமா தயாகரனே ஒருகதி காணேனே (என்)

11. ஹனுமான் [செஞ்சுருட்டி—ஆதி

தசரத நந்தன ராம் ராம் தசமுக மர்த்தன ராம் ராம்
பசுபதி ரஞ்சன ராம் ராம் பாப விமோசன ராம் (தச)
ரவிகுல பாவன ராம் ராம் ராஜீவ நயன ராம் ராம்
ராக்கா சசிவதன ராம் ராம் ரக்ஷித முனிஜன ராம் ராம் (தச)

12. சங்கு—முந்திரிக்கோட்டை [இந்துஸ்தான் பியாக்—ஆதி

முந்திரி :—எனக்கொண்ணும் புரியலே என்னமோ தெரியலே (எனக்)
சங்கு :—உனக்கு தெரியவைக்க ஒட்டி நின்னு பாருமே
அது தோணுமே
முந்திரி :—அட்டையோ நான் ஒட்டி நிற்க எட்டி நின்றால் என்னவோ
சங்கு :—உனக்கிது என்ன வெட்கமோ—அது எப்போ தெரியுமோ
முந்திரி :—தெரியாமல் முழிக்கிறேன் சொல்லுமே

சங்கு :—நீ தெரிஞ்சுக்கோ நான் கொஞ்சம் கிள்ளுகிறேன்
முந்திரி :—மியா
சங்கு :—என்ன மியா
முந்திரி :—பு பு பு பு
சங்கு :—பேசாதே
முந்திரி :—ஐய்யயோ ஐய்யயோ
சங்கு :—ஸூ
முந்திரி :—இதுவா
சங்கு :—ஆமா
முந்திரி :—எஜமானி மனசு இப்போ நிஜமாக தெரியுது
எஜமானும் நானே எஜமானும் நானே (எஜமா)

13. சங்கு—முந்திரிக்கோட்டை [சிந்து பைரவி—ரூபகம்

சங்கு :—ஆசை முகத்தின் மேலே என் அழகு சித்திர வேலே உன்
மீசைமுறுக்கினுலே மனம் விரு விருங்கிதுனுலே
முந்திரி :—விரு விருப்பும் சுறு சுறுப்பும் வருவது ஸகஜம்
சங்கு :—என் பருவத்துக்கும் உன் உருவத்துக்கும்
பொருத்தம் எப்படி பாரு
முந்திரி :—ஆஹா அது வெகு ஜோரு
சங்கு :—ஓஹோ
முந்திரி :—ஊக்கும்
பூமாலை எடுத்துமே போடு நீ கழுத்துலே (பூமாலை)
சங்கு :—போட்டுட்டேன்
முந்திரி :—நானும் போட்டேன்
சங்கு :—புதுமையான கல்யாணம் தடையில்லாமல் முடித்துட்டோம்
இருவரும் :—அழகு கட்டிலின் மீதே
அலங்காரமுடனிப்போதே . . . . .

## நடிகர்கள்

| | | |
|---|---|---|
| V. A. செல்லப்பா | ... | ஹனுமான் |
| செருகளத்தூர் சாமா | ... | விஸ்வாமித்ரர் |
| P. S. கோவிந்தன் | ... | ராமர் |
| V. S. மணி | ... | லக்ஷ்மணன் |
| C. V. V. பந்துலு | ... | சதுந்தன் |
| T. R. மஹாலிங்கம் | ... | நாரதர் |
| R. பாலசுப்பிரமணியம் | ... | ராவணன் |
| S. K. வாசுதேவ ராவ், B.A., B.L. | .. | சுக்ரீவன் |
| காளி N. ரத்னம் | ... | முந்திரிக்கோட்டை |

## நடிகைகள்

| | | |
|---|---|---|
| K. L. V. வசந்தா | ... | சீதை |
| M. R. சந்தானலக்ஷ்மி | ... | அஞ்சநாதேவி |
| ஞானம்பாள் | ... | சதுந்தன் மனைவி |
| C. T. ராஜகாந்தம் | ... | சந்து |

மற்றும் பல பிரபல நடிகர்கள்

ஸினேரியோ & டைரக்ஷன் :

**C. V. ராமன், B.A., L.L.B.,**

பாட்டு : **பாபநாசம் சிவன்**

ம்யூஸிக் டைரக்ஷன் : **K. V. மஹாதேவன்**


# இன்று

# தாம்கோ டீ

# பருகினீர்களா?

**தாம்கோ டீ லிமிடெட்**

**ஆலப்புழை**



THE SOLAR PRINTERS, 30, Wallajah Road, Mount Road, Madras